முறையீடு செய்து கொண்டுள்ளனர். இதுபற்றி மறு ஆய்வு செய்து, 1970-ஏப்ரலில் நடக்கும் முதலாண்டு ஒருங்கிணைந்த தேர்விற்கு மாணவர்களை அனுமதிக்குமாறு கேட்டு அவர்களின் முறையீடுகள் மருத்துவக் கல்வி இயக்குநரால், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பப்பட்டன. 1969-ம் ஆண்டு செப்டம்பரில் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் விதிமுறைகளில் கண்டுள்ள ஏனைய நிபந்தனைகளுக்குட்பட்டும், அவர்களது சொந்தப் பொறுப்பிலும் 1970 ஏப்ரல் தேர்விற்கு தனி தேர்வாக அனுமதிக்கப்படுவர் என்று சென்னை, பல்கலைக்கழகப் பதிவாளர் 26—3—1970-ல் மருத்துவக் கல்வி இயக்குநருக்கு அறிவித்தார். இது ஒரு முன்னோடியாக எடுத்துக்கொள்ளப்படக்கூடாதென்றும் பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது. 5 மாணவர்கள் மட்டுமே 1970 செப்டம்பரில் நடக்கும் தேர்வுகளில் எழுத வேண்டிவரும். ஏனெனில், 30—9—1969-க்குப் பிறகுதான் அவர்கள் கல்லூரியில் சேர்ந்தனர்.

(ஆ) நெல்லை மாவட்டம் ஆலங்குளம் தொகுதியில் பருவமழை தவறியதும், பஞ்ச நிவாரண நடவடிக்கைகளும்.

திரு. ஆலடி அருணா : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் நெல்லை மாவட்டம் ஆலங்குளம் தொகுதியில் பருவமழை தவறியதின் காரணமாக ஏற்பட்டுள்ள பஞ்சநிலையை போக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, the Government have received representations that owing to rains, acute distress prevails in Oothumalai, Kilpavoor and Nallur, that there is scarcity of drinking water and that, therefore new water supply schemes and deepening of the existing wells under drought relief may be taken up in the areas referred to above.

The Government consider that immediate relief schemes may be taken up in such areas as top priority has always been given to improvement of drinking water facilities under drougt relief programme. They accordingly sanction an expenditure not exceeding Rs. 2,46,000 towards the drinking water supply schemes.

The Collector of Tiruneivelі is requested to take action immediately to ensure that the allotments are utilised on the schemes. He is also requested to entrust the works to the agency of his choice having regard to the speedy execution of the work in the interests of the affected people and to send a report to Government in due course.

7. அரசினர் மசோதாக்கள்

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்)

மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோரு கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இம் மசோதாவை இப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப்படுத் தப்பட்டிருக்கிறது.

(8) அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கைகள் வரி—உள்ளாட்சி நிறுவன நிதி (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கைகள் வரி—உள்ளாட்சி நிறுவன நிதி (திருத்த) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(7) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கைகள் வரி—உள்ளாட்சி நிறுவன நிதி (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கைகள் வரி—உள்ளாட்சி நிறுவன நிதி (திருத்த) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இம் மசோதாவை இப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப்படுத் தப்பட்டிருக்கிறது.

(8) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி மசோதா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கி றார்கள்.

(7) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி மசோதா.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி மசோதாவை இப் பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.